**செய்தி வெளியீடு எண். 200** **நாள்: 13.04.2018**

## பத்திரிக்கை செய்தி

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் தேசிய அளவில் கிராம சுயாட்சி இயக்கம் 2018 நடத்திடவும், அதற்கான கால அட்டவணை மத்திய அரசால் 14.04.2018 முதல் 05.05.2018 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தை சார்ந்த அனைத்து 526 ஊராட்சிகளிலும் இத்திட்டத்தினை முனைப்புடன் செயல்படுத்திட, 14.04.2018 அன்று சமூக நல்லிணக்க நாள் மறைந்த பாரத ரத்னா டாக்டர் அம்பேத்கார் அவர்களின் நூறாவது பிறந்த நாளை சமூக நல்லிணக்க நாளாக கொண்டாடுதல், 18.04.2018 அன்று தூய்மை பாரத தினம் ஊரக மற்றும் உள்ளாட்சித்துறை மூலமாக திறந்த வெளியில் மலம் கழித்தல் பழக்கம் இல்லாத ஊராட்சிகளாக செயல்படுத்துதல் குறித்து, 20.04.2018 அன்று உஜ்ஜவாலா பஞ்சாயத்து கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலமாக அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள இல்லங்களுக்கு எரிவாயு இணைப்பு ஏற்படுத்துதல், 24.04.2018 அன்று தேசிய பஞ்சாயத்து தினம் அனைத்து ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்தி பஞ்சாயத்து வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து விவாதித்தல் மற்றும் உறுதி மொழி எடுத்தல், 28.04.2018 அன்று கிராம சக்தி அபியான் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா மற்றும் பிரதம மந்திரி சௌபாக்கியா திட்ட பயனாளிகளின் வெற்றி கதைகள் மற்றும் திட்ட செயலாகத்தில் சிறப்பாக செயல்பட்ட துறை / வட்டாரம் / ஊராட்சி ஆகியவற்றிக்கு விருது வழங்குதல், 30.04.2018 அன்று ஆயுஷ்மான் பாரத் அபியான் சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை மூலமாக மருத்துவ காப்பிடு திட்டத்தில் விடுபட்ட பயனாளிகளை சேர்த்தல், 02.05.2018 அன்று விவசாயிகள் தினம் விவசாய துறை மூலம் விவசாயிகளின் விளை பெருட்களை இரண்டு மடங்காக உயர்த்துதல் குறித்து, 05.05.2018 அன்று ஆஜ்விகா மற்றும் கௌஷல் விகாஸ் மேளா மாவட்ட முன்னோடி வங்கி மற்றும் மகளிர் திட்ட அலுவலக மூலமாக பல்வேறு நிகழ்ச்சிகள் எற்பாடு செய்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

குறிப்பிட்ட 91 கிராம ஊராட்சிகளில் 1. பிரதம மந்திரி உஜ்ஜவலா யோஜனா (எரிவாயு இணைப்பு) 2. சௌபாக்கியா (இலவச மின் இணைப்பு) 3. உஜாலா திட்டம் (LED விளக்கு) 4. பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா (வங்கி கணக்கு) 5. பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (காப்பீடு திட்டம்) 6. பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா (விபத்து காப்பீடு) 7. மிஷன் இந்திர தனுஷ் (நோய் தடுப்பு) திட்டங்களை 100 சதவீதம் முழுமையாக செயல்படுத்திடவும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கான கூட்டம் 12.04.2018 அன்று முற்பகல் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நடத்தப்பட்டு, கிராம ஊராட்சிகளில் செயல்படுத்திட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் பொதுமக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், மகளிர் சுய உதவி குழுக்கள் அதிக அளவில் பங்கேற்று பயனடையவும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**